# மெட்ரோ ரயிலில் பயணியர் அதிகரிப்பு

சென்னை, பிப். 17–

மெட்ரோ ரயிலில் பயணியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

வண்ணாரப்பேட்டை விம்கோ நகருக்கு, 14 முதல் மெட்ரோ ரயில் நீட்டிக்கப்பட்டுள்ளது. நீட்டிப்பு துவக்க விழாவையொட்டி, மெட்ரோ ரயிலில் இலவச பயணம் அறிவிக்கப்பட்டது. 1.40 லட்சம் பேர் இலவச பயணம் செய்தனர்.

கொரோனா ஊரடங்குக்கு முன், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் இயக்கப்படும் போது, தினமும், ஒரு லட்சம் பேருக்கு மேல் பயணம் செய்தனர்.

கொரோனா தாக்கத்தால் ரயில் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் துவங்கப்பட்டதில் இருந்து, பயணியர் வருகை படிப்படியாக அதிகரித்து, தினமும், 55 – 65 ஆயிரம் பயணியர் வரை பயணம் செய்தனர். சில நாட்களில், 65 – 75 ஆயிரமாக பயணியர் எண்ணிக்கை அதிகரித்தது.

மெட்ரோ ரயில் வண்ணாரப்பேட்டையில் இருந்து, விம்கோ நகருக்கு நீட்டிக்கப்பட்ட பின், நேற்று முன்தினம், கட்டணம் செலுத்தி, 80 ஆயிரத்து, 152 பேர் பயணம் செய்துள்ளனர்.

இதில், வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, தியாகராயா கல்லூரி, தண்டையார்பேட்டை, புதுவண்ணாரப்பேட்டை, சுங்கச்சாவடி, காலடிபேட்டை, திருவொற்றியூர், விம்கோ நகர் நிலையங்களுக்கு, 9,972 பேர் கட்டணம் செலுத்தி, பயணம் செய்துள்ளனர். பயணியர் வருகை படிப்படியாக உயர்ந்து, தினமும், இரண்டு லட்சம் பேர் வரை பயணம் செய்வர் என, எதிர்பார்ப்பு உள்ளது.

இவ்வாறு, அவர் கூறினார்.

## திருநங்கையர் இயக்கும் நிலையம்

சென்னை வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த பாதையில், புதுவண்ணாரப்பேட்டை ரயில் நிலையத்தில் பணியாற்ற, 13 திருநங்கையரை மெட்ரோ ரயில் நிர்வாகம் பணியமர்த்தி உள்ளது.

இவர்கள் புதுவண்ணாரப்பேட்டை ரயில் நிலையத்தில், நிலைய கட்டுப்பாட்டாளர், இயக்க பொறுப்பாளர், போக்குவரத்து பிரிவு, சோதனை இடம், பாதுகாப்பு பிரிவு உள்ளிட்ட இடங்களில், இரண்டு, 'ஷிப்டு'களில் பணிபுரிகின்றனர். புதுவண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம், திருநங்கையரால் இயக்கப்படுவது, பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.